## பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பதவி தொடர்பாக சிறந்த அனுபவமும் தேவையான தகைமைகளையும் கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

1. பதவி: நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (செயலாக்க அபிவிருத்தி)

**Programme Assistant (Processing Development)**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை:** 02

சேவை வகுதி இணை அதிகாரி - (MA-3)

**சம்பள அளவு:** ரூபா 53,940/-, 10,800/-, 11x1,190/-, 10x1,320/-, 5x1,350/- = ரூபா 94,980/- (MA 3-2025) (மாதாந்தம்) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**அடிப்படை சம்பள நிலை:** 45,722/- (01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் 11ஆம் அட்டவணையின் பிரகாரம்)

**கல்வித் தகைமைகள்:**

இரசாயனவியல், தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம் அல்லது விவசாய விஞ்ஞானம் போன்ற துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

ஆட்சேர்ப்பு முறை: எழுத்து மூல போட்டிப் பரீட்சை அல்லது / மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

2. **பதவி:** ஆய்வுகூட வெளிக்கள உதவியாளர்

**Lab Field Assistant**

சேவை வகுதி முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) - (MA- 1-1)

**சம்பள அளவு:** ரூபா 46,220/-, 10x540/-, 7x630/-, 4x890/-, 20x1,190/- = ரூபா 83,390/- (MA 1-1-2025 (மாதாந்தம்) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**அடிப்படை சம்பள நிலை:** 40,403/- (01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் 11ஆம் அட்டவணையின் பிரகாரம்)

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்கள மொழி / தமிழ் மொழி மற்றும் கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் போன்ற 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

ii. க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரு தடவையில் ஒரே அமர்வில் விஞ்ஞான பாடப்பரப்பில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (சாதாரண பொது வினாத்தாள் தவிர)

அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனத்தில் ஆய்வுகூடத் துறை பதவியொன்றில் தொடர்புடைய துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கவனத்திற் கொள்ளப்படும்.

**தகைமைகள் (உள்வாரி)**

(அ) ஆரம்பத் தரம், அரை தொழில்நுட்ப சேவை வகுதியின் கீழ் ''ஆ'' முதல் ''ஈ'' வரை பட்டியலிடப்பட்டுள்ள ஆய்வுகூட உதவியாளர் பதவியில் தற்போது பணியாற்றும் பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்

(ஆ) க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்கள மொழி / தமிழ் மொழி மற்றும் கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் போன்ற 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் அந்த நியமனம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பம் முடிவுறுத்தப்படும் திகதியில் உறுதி செய்யப்பட்ட நிரந்தர நியமனத்தின் கீழ் தொடர்ச்சியான திருப்திகரமான ஐந்து (05) வருட சேவைக் காலத்தை விண்ணப்பதாரர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை முடிவுறுத்தப்படும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ளவர்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள் / மாகாண அரசாங்க / அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சபைகளில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

ஆட்சேர்ப்பு முறை: எழுத்து மூல போட்டிப் பரீட்சை அல்லது / மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

**ஏனையவை:**

i. இலங்கை பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதோடு நாட்டின் எத்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. மிகச் சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**அனுகூலங்கள்:**

1. 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க சட்டத்தின் கீழான பணிக்கொடை.
2. அலுவலர்களுக்கான மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் / பணியாளர் நட்டஈட்டு காப்புறுதித் திட்டம்
3. ஊழியர் சேமலாப நிதியம் - ஊழியர் 10%, தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய மேலதிக அனுகூலங்கள்.

விண்ணப்பதாரியின் தற்போதைய தொழில், சம்பள விபரங்கள், காலப்பகுதியுடனான முன்னைய பதவிகள் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் விண்ணப்பதாரியின் ஏனைய அனைத்து விபரங்கள் அத்துடன் பிறப்பு சான்றிதழ், கல்விசார், தொழில்சார் மற்றும் சேவை சான்றிதழ்களை 2025.07.31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள்/ மாகாண அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தரமாக ஏற்கனவே இருப்பவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அதிகாரசபையின் உரித்தான பிரிவு தலைமைகளூடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

முடிவுறுத்தப்படும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது திணைக்களங்களின் /நிறுவனங்களின் தலைமையூடாக அனுப்பப்படாதவைகள் நிராகரிக்கப்படும்.

மேலே உள்ள வழிமுறைகளின் பிரகாரம் உங்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் உங்கள் தகவல்கள் பதிவு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ள QR குறியீடு வழியாக அனுப்பப்பட வேண்டும்.

இந்த விளம்பரத்தை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் **www.cda.gov.lk** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல.: 54, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**